**தலைப்பு 017 – பாராளுமன்ற சபை முதல்வரின் அலுவலகம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 017 - பாராளுமன்ற சபை முதல்வரின் அலுவலகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பாராளுமன்ற சபை முதல்வரின் அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 10 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அலுவலகத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூன் 07 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பாராளுமன்ற சபை முதல்வரின் அலுவலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் பாராளுமன்ற சபை முதல்வரின் அலுவலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் பாராளுமன்ற சபை முதல்வரின் அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அலுவலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிலுள்ள இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | | பெறுமதி<br>ரூபா | இணக்கமின்மை | | |
| (i) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| (அ) | நிதிப்பிரமாணம் 201(3)(அ) | 17,500 | நாளாந்த அடிப்படையில் சம்பளம் வழங்கப்படுமாயின், ஒவ்வொருவருக்கும் சம்பளம் | கைவிரல் ரேகை இயந்திரத்திலிருந்து பெறப்படுகின்ற அச்சிடப் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | செலுத்தப்பட வேண்டிய நாட்களின் எண்ணிக்கையை உறுதிப்படுத்தும் அறிக்கையொன்று, சான்றளிக்கும் அதிகாரியினால் அங்கீகாரமளித்த அதிகாரியிடமிருந்து பெறப்பட வேண்டியிருந்த போதிலும் , 02 சம்பள உறுதிச்சீட்டுக்களுக்காக அவ்வாறு நாட்களின் எண்ணிக்கை உறுதிப்படுத்தப்படாமல் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | படுகின்ற பதிவுகளைப் பயன்படுத்தி சம்பளம் வழங்கப்படுவதுடன், அதற்கேற்ப தயாரிக்கப்பட்ட படிவம் தவறுதலாக சான்றுப்படுத்தப்படுவதிலிருந்து விடுபட்டிருந்ததுடன் , அதை திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 262(2) | 99,400 | செலுத்தப்பட்ட அனைத்து உறுதிச்சீட்டுக்களில் மற்றும் உறுதிப்படுத்தும் ஆவணங்களில் ”செலுத்தப்பட்டது ” என முத்திரையிடப்பட்டிருக்க வேண்டிய போதிலும், அலுவலக குழாம் வாகனங்களுக்கு எரிபொருள் விநியோகத்திற்காக பெறப்பட்ட முற்பணத் தீர்ப்பனவு உறுதிச்சீட்டில் மற்றும் உறுதிப்படுத்தும் ஆவணங்களில் ”செலுத்தப்பட்டது ” என முத்திரையிடப்பட்டிருக்கவில்லை. | எரிபொருள் விநியோகத்திற்காக பெறப்பட்ட முற்பணத்தின் தீர்ப்பனவு தொடர்பான உறுதிச்சீட்டில் ”செலுத்தப்பட்டது ” முத்திரை தவறுதலகக இடப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | பொது நிர்வாகச் சுற்றறிக்கை | | | |
| | 2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய 05/2008 ஆம் இலக்க குடிமக்கள்/ வாடிக்கையாளர் சாசனத்தை அறிமுகப்படுத்து வதற்கான வழிகாட்டியின் 1.2 ஆம் பந்தி | குடிமக்கள் சாசனம் நிறுவனமயமாககப் படும்போது குறிப்பிடத்தக்க கொள்கையொன்றாக பொதுமக்களுக்கு சரியான விடயம் மற்றும் தகவல்கள் வெளிப்படையாக வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டிய போதிலும், அலுவலகத்தின் இணையதளத்தில் பராமரிக்கப்படுகின்ற ஒவ்வொரு நிறுவனத்தின் 2022 ஆம் ஆண்டின் வருடாந்த செயல்திறன் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டமை தொடர்பாக வழங்கப்பட்ட தகவல்கள் சரியானவை அல்ல. | அலுவலகத்தின் இணையத் தளத்தில் உரிய தகவல்கள் திருத்தப் பட்டுள்ளன. | சுற்றறிக்கைப் பிரகாரம் சரியான தகவல்கள் உள்ளடக்கப்ப டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | அரச கணக்குககள் சுற்றறிக்கை | | | |
| | 2023 நவம்பர் 30 ஆந் திகதிய 05/2023 ஆம் இலக்க அரச கணக்குககள் வழிகாட்டியின் 7.7 ஆம் பந்தி | காசுப்பாய்ச்சல் கூற்றானது பணம் மற்றும் குறுக்கு பதிவுகள் ஆகிய இரண்டையும் கருத்திற் கொண்டு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், நிறுவனத்தினால் காசப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டபோது ப்பதில் நிறுவனம் குறுக்கு பதிவுகள் கருத்திற் கொள்ளப் பட்டிருக்கவில்லை. | அலுவலகம் “பி“ தரத்திலான திணைக்கள மொன்று என்பதால், கணக்கு பதிவு செயன் முறையின் போது குறுக்கு பதிவின் மூலம் கணக்கு வைத்தலொன்று செய்யப்பட மாட்டாது. | சுற்றறிக்கைப் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படு வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 8 பாராளுமன்றக் அமர்வுகள் நடைபெற்ற நாட்களில் மாலை 5.30 மணிக்குப் பின்னர் கடமையில் ஈடுபட்டமைக்காக வழங்கப்பட்ட கொடுப்பனவுகளுக்கான உறுதிச்சீட்டுக்களில் வெளியேறியமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் இன்றி 38 அதிகாரிகளுக்கு ரூபா 104,250 செலுத்தப்பட்டிருந்தது. | பாராளுமன்ற அமர்வு நாட்களில் மாலை 5.30 மணிக்குப் பின்னர் வெளியேறியமையை உறுதிப்படுத்தல் தொடர்பான ஆவணங்கள் தவறுதலாக கோவைகளில் இணைக்கப்படாமல் விடுபட்டிருந்ததுடன் அந்த ஆவணங்கள் தற்போது கோவைகளில் இணைக்கப்பட்டுள்ளன. | கொடுப்பனவு செலுத்தும் போது உரிய ஆவணங்களின் மூலம் உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பாராளுமன்ற அமர்வுகள் நடைபெற்ற 2023 யூலை 01 சனிக்கிழமையன்று வேலை செய்தமைக்காக 1/20 கொடுப்பனவிற்காக கைவிரல் ரேகை அச்சீட்டுக் குறிப்புக்கள் சரி பார்க்கப்பட்டு, சான்று படுத்தப்படாமல் 33 அதிகாரிகளுக்கு ரூபா 65,915 செலுத்தப்பட்டிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | 1/20 கொடுப்பனவு செலுத்தப்பட்டபோது கைவிரல் ரேகை அசசீட்டுக் குறிப்புக்களின் மூலம் வருகை மற்றும் வேலை நேரம் ஆகியவை உறுதிப்படுத்தப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் உள்ளகக் கணக்காய்வுப் பணி உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பாராளுமன்றத்தின் சபாநாயகரின் அலுவலகத்தில் மிகக் குறைந்த பதவியணி காணப்படுவதால் எனது நேரடி மேற்பார்வையின் கீழ் ஒரு பயனுள்ள அமைப்பின் கீழ் பேணப்படுவதால் உள்ளக கணக்காய்வு செயல்முறை முறையாக செயல்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்கு முடியும். | தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |